

2022 ஆம் ஆண்டிற்கான செயலாற்றுகை அறிக்கை

எல்லை நிர்ணய ஆணைக்குழு

செலவுத் தலைப்பு - 025

உள்ளடக்கம்

1.	தாபன ரீதியான பின்னணி/ செயலுருப்படுத்தல் பொழிப்பு	1
2.	முன்னேற்றமும் தொலைநோக்கும்	5
3.	ஆண்டின் மொத்த நிதி வெளிப்படுத்துகை	9
4.	செயலாற்றுகை சுட்டி	21
5.	நிலையான அபிவிருத்தி நோக்குகளை (SDG) நிறைவேற்றிக் கொள்வதற்கான செயலாற்றுகை	22
6.	மனிதவள பின்னணி	22
7.	இணக்க அறிக்கை	24
8.	நன்றி நவிலல்	30

1. தாபனத்தின் பின்னணி

1.1 அறிமுகம்

- இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்புக்க அமைவாக, அதிமேதகு ஜனாதிபதி அவர்களுக்குக் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின் பிரகாரம் 2020.12.07 ஆம் தேதி ஒரு வருட காலத்திற்கு புதிய எல்லை நிர்ணய ஆணைக்குழுவொன்று நியமனம் செய்யப்பட்டதோடு, அதன் தலைவரும் உறுப்பினருமாக திரு. மஹிந்த தேசப்பிரிய அவர்களும் ஏனைய இரு உறுப்பினர்களாக திரு.ஜயலத் ரவி திசாநாயக்க மற்றும் பீ.எச்.ஜீ. பிரேமசிரி ஆகியோரும் நியமனம் செய்யப்பட்டனர். அந்த ஒரு வருட கால நிறைவில் அந்த ஆணைக்குழுவே அதிமேதகு ஜனாதிபதி அவர்களினால் 2021.12.07 ஆந் திகதி முதல் ஒரு வருட காலத்திற்கு மீண்டும் நியமிக்கப்பட்டது.

- எல்லை நிர்ணய ஆணைக்குழுவின் அலுவலகம், நில அளவையாளர் நாயகத்தின் அலுவலகக் கட்டிடத்தில் நிறுவப்பட்டுள்ளதுடன், அதன் முகவரி எல்லை நிர்ணய ஆணைக்குழு, நில அளவையாளர் நாயகம் அலுவலகக் கட்டிடம், த.பெ.இல.506, கொழும்பு-05 என்பதாகும்.

எல்லை நிர்ணய ஆணைக்குழுவின் நியமனம், அதிகாரங்கள் மற்றும் பணிப்பொறுப்புக்கள் பற்றிய நியதிச் சட்ட ஏற்பாடுகள்

அரசியலமைப்பின் 41 ஆ உறுப்புரையின் பிரகாரம் மேற்படி ஏற்பாடுகள் பின்வருமாறாகும்,*

41 ஆ

(1) ஆளெவரும் பேரவையின் விதப்புரையொன்றின் மீதன்றி, இவ்வுறுப்புரைக்கான அட்டவணையிற் குறித்துரைக்கப்பட்ட ஆணைக்குழுக்களுள் எவற்றினதும் தவிசாளராக அல்லது உறுப்பினரொருவராக சனாதிபதியினால்; நியமிக்கப்படலாகாது.

(2) அத்தகைய ஆணைக்குழு எதனதும் தவிசாளராக அல்லது உறுப்பினரொருவராக பதிற் கடமையாற்றுவதற்கு நியமிக்கப்பட்ட எவரேனுமாள் தொடர்பில் ஏற்புடையனவாதல் வேண்டும்.

(3) இவ்வுறுப்புரைக்கான அட்டவணையிற் குறித்துரைக்கப்படும் ஆணைக்குழுக்களின் தவிசாளர்களாக அல்லது உறுப்பினர்களாக நியமனம் செய்வதற்கான தகுதியான மற்றும் உகந்த ஆட்களை அத்தகைய நியமனத்துக்கான சந்தர்ப்பம் எழுகின்ற பொழுதெல்லாம் சனாதிபதிக்கு விதந்துரைத்தல் பேரவையின் கடமையாதல் வேண்டும் என்பதுடன், அத்தகைய விதப்புரைகள், பால் சமத்துவம் உட்பட வெவ்வேறு பல்லின சமூகக்குழுக்களைப் பிரதிபலித்தலை உறுதிப்படுத்துவதற்கு முயற்சித்தலும் வேண்டும். அத்தகைய ஆணைக்குழுக்களின் தவிசாளர்களின் விடயத்தில், பேரவையானது நியமனம் செய்வதற்காக மூன்று ஆட்களை விதந்துரைத்தல் வேண்டுமென்பதுடன், சனாதிபதி விதந்துரைக்கப்பட்ட ஆட்களில் ஒருவரைத் தவிசாளராக நியமித்தலும் வேண்டும்.

(4) சனாதிபதி அத்தகைய நியமனங்களுக்கான பேரவையின் விதப்புரைகளைப் பெற்றுக் கொண்ட பதின்நான்கு நாட்களினுள், இவ்வுறுப்புரைக்கான அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட ஆணைக்குழுக்களின் தவிசாளர்களையும் உறுப்பினர்களையும் நியமித்தல் வேண்டும். சனாதிபதி, அத்தகைய பதினான்கு நாட்களுக்குள் அவசியமான நியமனங்களைச் செய்யத் தவறும் பட்சத்தில் -

(அ) ஆணைக்குழுவொன்றின் உறுப்பினர்களாக நியமிக்கப்படுவதற்கு (3) ஆம் பந்தியின் கீழ் விதந்துரைக்கப்பட்ட ஆட்கள், அத்தகைய காலப்பகுதி முடிவுற்ற தேதியிலிருந்து பயன்பட, ஆணைக்குழுக்களின் உறுப்பினர்களாக நியமிக்கப்பட்டவர்களாகக் கருதப்படுதல் வேண்டும்; அத்துடன்

ஆ) ஆணைக்குழுவொன்றின் தவிசாளராக நியமிக்கப்படுவதற்கு (3) ஆம் பந்தியின் கீழ் விதந்துரைக்கப்பட்ட பெயர்கள் பட்டியலில் எவரின் பெயர் முதலாவதாக உள்ளதோ அவர், அத்தகைய காலப்பகுதி முடிவுற்ற தேதியிலிருந்து பயன்பட, ஆணைக்குழுவின் தவிசாளராகக் கருதப்படுதல் வேண்டும்.

(5) இவ்வுறுப்புரையின் ஓராம் பந்தியின் கீழ் நியமிக்கப்படும் ஆளொருவர் அல்லது ஏதேனும் அத்தகைய ஆணைக்குழுவின் தவிசாளராக அல்லது உறுப்பினரொருவராகப் பதிற் கடமையாற்றவென நியமிக்கப்படும் ஆளொருவர், அரசியலமைப்பில் அல்லது ஏதேனும் எழுத்திலான சட்டத்தில் ஏற்பாடு செய்யப்பட்டவாறு தவிர, அகற்றப்படுதல் ஆகாது என்பதுடன், அத்தகைய ஏற்பாடெதுவும் செய்யப்பட்டிராதவிடத்து, பேரவையின் முன்னங்கீகாரத்துடன் மட்டுமே அத்தகைய ஆள் சனாதிபதியினால் அகற்றப்படுதலும் வேண்டும்.

(6) தேர்தல் ஆணைக்குழு தவிர்ந்த, ,இவ்வுறுப்புரையின் அட்டவணையில் குறிப்பீடு செய்யப்பட்ட எல்லா ஆணைக்குழுக்களும் பாராளுமன்றத்திற்குப் பொறுப்பாதலும் வகைசொல்லற்பாதலும் வேண்டும்."

அட்டவணை

(அ) தேர்தல் ஆணைக்குழு.
(ஆ) அரசாங்க சேவை ஆணைக்குழு.
(இ) தேசிய பொலிஸ் ஆணைக்குழு
(ஈ) இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு.
(உ) இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துரைகளைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழு.
(ஊ) நிதி ஆணைக்குழு.
(எ) எல்லை நிர்ணய ஆணைக்குழு.

95

(1) அரசியலமைப்புத் தொடங்கிய பின்னர் மூன்று மாதங்களுக்குள்ளாகத் தேர்தல் மாவட்டங்களை வரையறுப்பதற்காக சனாதிபதி வரையறை ஆணைக்குழுவொன்றைத் தாபித்தல் வேண்டும். அது சனாதிபதியினால் நியமிக்கப்படும் மூன்று ஆட்களைக் கொண்டமைந்ததாதல் வேண்டும். அவர்கள் அரசியலில் தீவிரமாக ஈடுபடாதவர்களெனச் சனாதிபதி திருப்பதியுறுதல் வேண்டும். அத்தகைய ஆட்களுள் ஒருவரைச் சனாதிபதி தவிசாளராக நியமித்தல் வேண்டும்.

(2) வரையறை ஆணைக்குழுவின் உறுப்பினரெவருவரும் இறந்தால் அல்லது பதவிதுறந்தால், அல்லது அத்தகைய உறுப்பினரெவரும் அத்தகையவராக அவரது பணிகளை நிறைவேற்றவதற்கு இயலாதவராகிவிட்டாரெனச் சனாதிபதி திருப்தியுற்றால், இவ்வுறுப்புரையின் (1) ஆம் பந்தியின் ஏற்பாடுகளுக்கிணங்கச் சனாதிபதி அவரது இடத்தில் வேறோர் ஆளை நியமித்தல் வேண்டும்.

96

(1) வரையறை ஆணைக்குழு இலங்கையை இருபதுக்குக் குறையாததும் (இருபத்தைந்துக்கு) மேற்படாததுமான தேர்தல் மாவட்டங்களாகப் பிரித்து அவற்றிற்குப் பெயர்களைக் குறித்தொதுக்குதல் வேண்டும்.

(2) இலங்கையின் மாகாணம் ஒவ்வொன்றும் அதுவே ஒரு தேர்தல் மாவட்டமாக அமையலாம். அல்லது மாகாணம் ஒவ்வொன்றும் இரண்டோ பலவாயோ தேர்தல் மாவட்டங்களாகப் பிரிக்கப்படலாம்.

(3) மாகாணமொன்று பல தேர்தல் மாவட்டங்களாகப் பிரிக்கப்படுமிடத்து, வரையறை ஆணைக்குழுவானது ஒவ்வொரு தேர்தல் மாவட்டமும் ஒரு நிருவாக மாவட்டமாக இருப்பதனை, அல்லது இரண்டோ பலவோவாய நிருவாக மாவட்டங்களின் சேர்க்கையாக இருப்பதனை, அல்லது இரண்டோ பலவோவாய தேர்தல் மாவட்டங்கள் ஒன்று சேர்ந்து நிருவாக மாவட்டமொன்றாக இருப்பதனை இயலக்கூடிய அளவுக்கு உறுதிப்படுத்தும் வண்ணம் அப்போதுள்ள நிருவாக மாவட்டங்களைக் கருத்துக்கெடுத்தல் வேண்டும்.

(4) ஒவ்வொரு மாகாணத்திலுமுள்ள தேர்தல் மாவட்டங்கள் எல்லாம் ஒன்றாகச் சேர்ந்து நான்கு உறுப்பினர்களைத் தெரிவு செய்து அனுப்புவதற்கு உரித்துடையனவாதல் வேண்டும் : (இது அத்தகைய தேர்தல் மாவட்டங்களின் தேருநர் இடாப்பில் தம் பெயர்களைக் கொண்டிருக்கும் தேருநர்களின் எண்ணிக்கையைத் தொடர்புறுத்திப் பார்க்கும் போது எத்தனை உறுப்பினர்களை அம்மாவட்டங்கள் தெரிவு செய்து அனுப்புவதற்கு உரித்துடையனவோ அத்தனை உறுப்பினர்களைவிடப் புறம்பானது) : வரையறை ஆணைக்குழுவானது அவ்வாறு ஒவ்வொன்றுக்கும் உரித்தாயுள்ள எண்ணிக்கையை அத்தகைய தேர்தல் மாவட்டங்களுக்கிடையில் ஒப்புரவான முறையில் பங்குபோடல் வேண்டும்.

(5) வரையறை ஆணைக்குழுவின் உறுப்பினரிடையே அபிப்பிராய வேறுபாடு உள்ளவிடத்து, அவர்களில் பெரும்பான்மையினரின் அபிப்பிராயமே மேலோங்கி நிற்றல் வேண்டுமென்பதுடன், அதுவே ஆணைக்குழுவின் முடிவாகக் கருதப்படுதலும் வேண்டும். ஆணைக்குழுவின் முடிவாகக் கருதப்படுதலும் வேண்டும். ஆணைக்குழுவின் உறுப்பினர் ஒவ்வொருவரும் வித்தியாசமான அபிப்பிராயத்தை உடையவராயிருக்குமிடத்து, தவிசாளரின் அபிப்பிராயமே ஆணைக்குழுவின் முடிவெனக் கருதப்படுதல் வேண்டும். வேறுபடும் அபிப்பிராயங் கொண்ட உறுப்பினர் எவரும் அவ்வாறு வேறுபடுவதற்குத் தமக்குள்ள காரணங்களைக் கூறலாம்.

(6) வரையறை ஆணைக்குழுவின் தவிசாளர், ஆணைக்குழுவின் முடிவுகளை, வேறுபடும் அபிப்ராயங்களைக் கொண்ட உறுப்பினரால் கூறப்பட்ட காரணங்கள் எவையேனுமிருப்பின் அவற்றோடு சேர்த்து சனாதிபதிக்கு அறிவித்தல் வேண்டும்.

*2022.10.21 ஆம் திகதி பாராளுமன்றத்தினால் நிறைவேற்றப்பட்ட 2022.10.31 ஆம் திகதி தொடக்கம் செயல்வலுவாக்கம் செய்யப்பட்ட அரசியல் அமைப்பின் 21 ஆம் யாப்புத்திருத்தத்தின் மூலம் இந்த ஏற்பாடு திருத்தம் செய்யப்பட்டுள்ளது.

1.2 நிறுவனத்தின் நோக்கு, பணிகள்,

நோக்கு

நெறிமுறை மற்றும் நியாயமான கோட்பாடுகளின் அடிப்படையில் எல்லைகளை நிர்ணயம் செய்வதில் சிறந்து விளங்குதல்.

பணிக்கூற்று

அரசியல் யாப்பினால் அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளவாறு சுயாதீனமாகவும், நெறிமுறையுடனும் நியாயமாகவும், வினைத்திறனுடனும், வெளிப்படைத் தன்மை கொண்டதாகவும், விசுவாசமாகவும் மற்றும் சட்டரீதியாகவும் எல்லைகளை நிர்ணயம் செய்தல்.

நோக்கங்கள்

- அனைத்து வாக்காளர்களுக்கும் அல்லது பிரசைகளுக்கும் சமமான உயர்ந்த அளவில் சமமான பிரதிநிதித்துவம் கிடைக்கத்தக்க விதத்தில் மற்றும் மக்களின் சனநாயக உரிமைகள் மற்றும் அந்த நலைமையைப் பாதுகாக்கின்றவாறு வினைத்திறனுடன் அதனை உறுதிசெய்வதற்காக தேர்தல்கள் மாவட்டங்கள் மற்றும் ஏனைய நிருவாக எல்லைகளை நிர்ணயம் செய்தல்
- தேர்தல் மாவட்டம் அல்லது நிருவாக பிரதேசம் அல்லது கல்வி, சுகாதார அல்லது பாதுகாப்பு போன்ற சமூக பொருளாதார சேவைகளுக்கான எல்லைகளை நிர்ணயம் செய்வதற்காகக் கையளிக்கப்படுகின்ற எல்லை நிர்ணய அலுவல்களை உரிய காலப்பகுதியினுள் பூர்த்திசெய்தல்.
- அரசு மற்றும் வேறு நிறுவனங்களுக்கு சுய தீர்மானம் எடுப்பதற்குத் தேவையான எல்லை நிர்ணயங்களுக்குத் தேவையான அறிவு மற்றும் தகவல்களை வழங்குதல்.
- எல்லைநிர்ணய தொடர்பான தகவல்கள் மற்றும் உரிய ஆவணங்களை சேகரிக்கும் நிலையமொன்றைத் தாபித்தல்.
- நீதியானதும், சுதந்திரமானதும் மற்றும் நம்பத்தகுந்ததுமான தேர்தல்களுக்காக முறையான, சரியான மற்றும் நியாயமான எல்லை நிர்ணயச் செயற்பாடொன்று அவசியமெனப் பிரசைகள், அரசியல் கட்சிகள் உள்ளிட்ட அனைத்துத் தரப்பினர்களையும் அறிவுறுத்துதல்.


1.3 முக்கிய செயல்பாடுகள் மற்றும் அதிகாரங்கள்

எல்லை நிர்ணய ஆணைக்குழுவை நியமனம் செய்தல் மற்றும் பிரதான பணிகள் அரசியல் யாப்பின் 95 மற்றும் 96 ஆம் உறுப்புரைகளில் குறிப்பிடப்பட்டுள்ளன. இருப்பினும் ஏனைய ஆணைக்குழுக்கள் போன்று இந்த ஆணைக்குழு தொடர்பில் கீழே குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் அரசியல் யாப்பில் அல்லது பத்தொன்பதாம் அரசியல் யாப்புத் திருத்தத்தில் குறிப்பிடப்படவில்லை.

- ஆணைக்குழுவின் தொழிற்பாடுகள் (Functions)
- ஆணைக்குழுவின் தத்துவங்கள் (Powers)

மேலும் தற்போதைய அரசியல் யாப்பில் எல்லை நிர்ணய ஆணைக்குழுவுக்கு பொறுப்புகள் கையளிப்பொன்று (Mandate) செய்யப்படவில்லை நிரந்தரமாகப் பணிகளை ஆரம்பிப்பதற்காக தமக்கு பொறுப்புக்கள் ஒப்படைக்கப்படுகின்ற பாராளுமன்றச் சட்டதிட்டங்கள் வகுக்கப்படும் என்ற எதிர்பார்ப்புடன் எல்லை நிர்ணய ஆணைக்குழு உள்ளது.

1.4 ஒழுங்கமைப்புக் கட்டமைப்பு



2 முன்னேற்றமும் எதிர்கால நோக்கும்

2.1 கூட்டங்கள்

இவ்வாண்டிற்குள் நிருவாக மற்றும் கொள்கை விடயங்களைக் கலந்துரையாடுவதற்காக **13** கூட்டங்கள் நடைபெற்றன.

கூட்டத் தவணை	திகதி	கூட்டத் தவணை	திகதி
20 ஆவது கூட்டம்	2022.01.05	**27** ஆவது கூட்டம்	2022.07.27
21 ஆவது கூட்டம்	2022.02.07	**28** ஆவது கூட்டம்	2022.08.25
22 ஆவது கூட்டம்	2022.02.28	**29** ஆவது கூட்டம்	2022.09.22
23 ஆவது கூட்டம்	2022.03.22	**30** ஆவது கூட்டம்	2022.10.20
24 ஆவது கூட்டம்	2022.04.05	**31** ஆவது கூட்டம்	2022.11.30
25 ஆவது கூட்டம்	2022.05.26	**32** ஆவது கூட்டம்	2022.12.13
26 ஆவது கூட்டம்	2022.06.29		

2.2 தாபன ரீதியான பணிகள்

ஆணைக்குழுவின் அனைத்து அலுவலர்களினதும் தாபனப் பணிகளுடன் தொடர்புடையதாக அலுவலர்களின் தனிப்பட்ட கோப்புக்களைப் பேணிச் செல்லல் உள்ளிட்ட அனைத்து தாபனப் பணிகளையும் ஆற்றுதல், ஆணைக்குழுவின் அங்கத்தவர்களின் தாபனப் பணிகளை ஆற்றுதல், ஆணைக்குழுவுக்குச் சொந்தமான வாகனங்கள் 02 உடனும் தொடர்புடைய எழுத்துக் கோப்புக்களைப் பேணல், விடுமுறை எழுத்தாவணங்களைப் பேணல் மற்றும் அலுவலக உபகரணங்களின் பழுதுபார்ப்பதோடு தொடர்புடைய பதிவேடுகளைப் பேணலும் நடைபெறுகின்றது.

இதற்கு மேலதிகமாக ஜனாதிபதி செயலகம், பாராளுமன்றம், பாராளுமன்ற சபை, முகாமைத்துவ சேவை திணைக்களம், பொதுநிருவாக அமைச்சு மற்றும் அறிக்கைகளை சமர்ப்பிக்க வேண்டிய ஏனைய நிறுவனங்களுக்கு வழங்கப்பட வேண்டிய அறிக்கைகள் உரிய திகதியில் வழங்கப்படுதல் இடம்பெறுகின்றது.

2.3 நிதி நிருவாகம்

அனைத்து கொடுப்பனவுப் பணிகளும் உரிய பரிந்துரை மற்றும் அங்கீகாரத்துடன் கூடியதாக நிதிப் பிரமாணங்களுக்கமைய முறையாக மேற்கொள்ளப்பட்டதோடு பெறுகைப் பணிகளும், பண்டக் கணிப்பீட்டுப் பணிகளும் முறையாக மேற்கொள்ளப்பட்டுள்ளன. பொதுத் திறைசேரியினால் மேற்கொள்ளப்பட்டுள்ள அனைத்து அறிக்கைகளும் தகவல்களும் முறையாக வழங்கப்படுதலும் நிகழ்ந்தள்ளன.

மேலும் தேசிய கணக்காய்வு ஆணைக்குழுவினால் கோரப்பட்டுள்ள அறிக்கைகளை உரியவாறு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதோடு கணக்காய்வு வினாக்களுக்கும் உரிய பதில்கள் வழங்கப்பட்டுள்ளன.

2.4. எல்லை நிர்ணயம் மற்றும் அதனோடு தொடர்புடைய பிரச்சினைகள் பற்றி பொதுமக்களையும் அலுவலர்களையும் அறிவூட்டல்.

2.4.1 எல்லை நிர்ணய பிரச்சினைகள் குறித்து ஆராய்ந்து தீர்வு முன்மொழிவுகளுடனான அறிக்கையை அதிமேதகு ஜனாதிபதிக்கு சமர்ப்பித்தல்

20வது அரசியலமைப்பு திருத்தம் மூலமும் எல்லை நிர்ணய ஆணைக்குழுவிற்கு அதிகாரங்களை வழங்காத காரணத்தினால்இ அதுபற்றி அதிமேதகு ஜனாதிபதி அவர்களுக்கு அறிவிக்கும் வகையில் கலந்துரையாடல் ஒன்றை நடத்த ஏற்பாடு செய்துஇ 2021.03.25 அன்று அதிமேதகு ஜனாதிபதியுடன் அக்கலந்துரையாடல் நடைபெற்றது. எல்லை நிர்ணயம் தொடர்பில் பொதுவாக காணப்படுகின்ற பிரச்சினையான சூழ்நிலையினால் மக்களுக்கும் அரசாங்கத்திற்கும் ஏற்பட்டுள்ள சிரமங்கள் தொடர்பில் அதிமேதகு ஜனாதிபதி அவர்கள் ஆணைக்குழுவுடன் நீண்ட நேரம் கலந்துரையாடினார். பின்னர் இந்த பிரச்சனைகளையும் அதற்கான தீர்வுகளையும் கண்டறிந்து அறிக்கை அளிக்குமாறு அதிமேதகு ஜனாதிபதி அவர்கள் ஆணைக்குழுவிற்கு அறிவுறுத்தினார். அதன் பிரகாரம், சனாதிபதி அவர்களின் செயலாளர் அவர்களினால் PS/CAS/00/12/DC/02மற்றும் 2021.03.29 ஆம் திகதிய கடிதத்தின் மூலம் அன்றாட இயல்பு வாழ்க்கையைப் பயனுறுதி மிக்கதாக பேணிச் செல்வதில் ஏற்பட்டுள்ள தடைகள் மற்றும் கஷ்டங்கள் தொடர்பாக முன்னுரிமை வழங்கி, தேசிய, மாகாண மற்றும் பிரதேச மட்டங்களில் உருவாகியுள்ள எல்லை நிர்ணயப் பிரச்சினைகள் குறித்து கவனம் செலுத்தி பிரச்சினைகளை ஆராய்ந்து தீர்வுப் பரிந்துரைகளுடன் அறிக்கையொன்றைச் சமர்ப்பிக்குமாறு செய்யப்பட்ட அறிவுறுத்தலின் பிரகாரம், அது தொடர்பான ஆரம்ப அறிக்கை ஒன்று தயாரிக்கப்பட்டு 2021.11.02 ஆம் திகதி அதிமேதகு சனாதிபதி அவர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்ட பின்னர் 2022 ஆம் ஆண்டிலும் இந்தப ் பணி தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டது. 2022 ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் நாட்டில் ஏற்பட்ட நெருக்கடியான நிலைமைக்கமைய அந்த நடவடிக்கைகளை நிறைவேற்றுவதில் பாரியளவில் தடைகள் ஏற்பட்டதோடு, 2022 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் தொடக்கம் தற்போதைய சனாதிபதி அவர்களின் அறிவுறுத்தல்களின் பிரகாரம், அப்பணிகள் நடைபெற்று வருகின்றன.

2.4.2 2021 ஆம் ஆண்டில் பிரதேச செயலகப் பிரிவுகள் மற்றும் கிராம அலுவலர் பிரிவுகளை வேறு பிரிக்கும் நோக்கத்திற்காக எல்லை நிர்ணய ஆணைக்குழுவின் உதவியைப் பெற்றுக் கொள்ளுமாறு செய்யப்பட்ட வேண்டுகோளை கவனத்திற் கொள்ளாமல், அந்தப்பணிகள் அமைச்சர் அவர்களால் நியமனம் செய்யப்பட்ட குழுவொன்றின் மூலம் மேற்கொள்ளப்பட்டதன் பின்னர் அவற்றுடன் தொடர்புடையதாக செய்யப்பட வேண்டிய உள்ளூராட்சி நிறுவனங்களின் வட்டார எல்லைகளை மாற்றம் செய்யவதற்காக இன்னொரு குழுவை நியமனம் செய்வதற்கு விடயப் பொறுப்பு அமைச்சர் அவர்களினால் 2022 மார்ச் மாதம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. இது தொடர்பில் எல்லை நிர்ணய ஆணைக்குழுவின் அதிருப்தி, நேரடியா கதவிசாளர் அவர்களினால் கௌரவ சனாதிபதி அவர்களுக்கு தெரிவிக்கப்பட்டதோடு, எல்லை நிர்ணய ஆணைக்குழுவின் பிரதிநிதித்துவம் இன்றி அத்தகைய குழுவொன்றைச் செயற்படுத்துவது அவசியமற்றதென கௌரவ சனாதிபதி அவர்களினால் இணக்கம் தெரிவிக்கப்பட்டது.

2.4.3 2022 செப்டம்பர் மாதம் கௌரவ. சனாதிபதி அவர்களினால் பல உள்ளூர் அதிகார நிறுவனங்கள் மாநகர சபைகளாக தரமுயர்த்துவதற்காக செய்யப்பட்ட முன்மொழிவுகளின் பிரகாரம், பல நகர சபைகள் மாநகர சபைகளாக தரமுயர்த்தப்பட்டு எல்லை நிர்ணயம் செய்யப்பட்டு தேர்தல் வட்டார எல்லைகளைப் பிரிப்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளதென அவதானிக்கப்பட்டமையினால், இந்தச் செயற்பாடுகளை சட்டரீதியான எல்லை நிர்ணய ஆணைக்குழுவினூடாக ஆற்றிக்கொள்ளுமாறு சனாதிபதியின் செயலாளர் அவர்களிடம் முன்வைக்கப்பட்ட கோரிக்கை, பொது நிர்வாகம், உள்நாட்டு அலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சினால் கவனத்திற் கொள்ளப்படாமல் ஐந்து பேர் கொண்ட குழுவொன்றின் மூலம் அச்செயற்பாடுகள் நிறைவேற்றப்பட்டிருந்தன. தேர்தல் வட்டாரங்களை பிரிக்கும் ஒரு பணி என்பதால், இது தொடர்பில் எல்லை நிர்ணய ஆணைக்குழுவின் கடுமையான வெறுப்பு மற்றும் எதிர்ப்பு பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர் அவர்களுக்கு 2022 ஆம் ஆண்டு ஒக்தோபர் மாதம் 19 ஆம் திகதி எழுத்து மூலம் அறிவிக்கப்பட்டது. அதே போன்று இது தொடர்பாக உள்ளூராட்சி அமைச்சின் சட்ட அலுவலருக்கும் அறிவிக்கப்பட்டது. இது தொடர்பாக சனாதிபதியின் செயலாளர் மற்றும் அமைச்சரவையின் செயலாளர் ஆகியவர்களுக்கும் அறிவிக்கப்பட்டதோடு, கௌர சனாதிபதி அவர்களுக்கும் இது தொடர்பாக அறிக்கையிடப்பட்டது.

2.4.4 2022 ஆம் ஆண்டு செப்தெம்பர் /நவம்பர் காலப்பகுதியினுள் உள்ளூராட்சி நிறுவனங்களின் உறுப்பினர்களின் எண்ணிக்கையை 8800 இருந்து 4000 வரை குறைத்தல் தொடர்பான முன்மொழிவொன்றை கௌரவ சனாதிபதி அவர்கள் தெரிவித்திருந்தமையினால், அவ்வாறு செய்வதாயின் புதிய எல்லை நிர்ணயமொன்று மேற்கொள்ள வேண்டுமென்பதினால் அதற்குப் பதிலாக உள்ளூராட்சி விடயத்துக்குப் பொறுப்பான அமைச்ச் அவர்களினால் நியமிக்கப்படுகின்ற ஐந்து உறுப்பினர்களைக் கொண்ட தேசிய குழுவை எல்லை நிர்ணய ஆணைக்குழுவின் தலைமையில் நியமனம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்குமாறு எல்லை நிர்ணய ஆணைக்குழுவினால் சனாதிபதியின் செயலாளர் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர் ஆகியோருக்கு அறிவிக்கப்பட்டது.

2.4.5. அந்த கோரிக்கைக்கு, விடயப் பொறுப்பு அமைச்சரான கௌரவ. பிரதமர் அவர்கள் இணக்கம் தெரிவித்தமை காரணமாக, அந்த தேசிய குழுவிற்கு எல்லை நிர்ணய ஆணைக்குழுவின் வெளிநாடு சென்றிருந்த உறுப்பினர் தவிர்ந்த ஏனைய இரண்டு உறுப்பினர்களுடன் மேலும் மூன்று பேர்கள் கொண்ட குழுவொன்று விடயப் பொறுபபு அமைச்சர் அவர்களினால் 2022.11.01 ஆம் திகதி தொடக்கம் 2023.02.28 ஆம் திகதி வரையான காலப்பகுதிக்காக நியமனம் செய்யப்பட்டனர். அக் குழு பின்வருமாறு.

1. திரு. மஹிந்த தேசப்பிரிய - (தவிசாளர்)
2. திரு. ஜயலத் ர.வி. திசாநாயக்க - (அங்கத்தவர்)
3. திரு. டபிள்யூ. எம். எம். ஆர். அதிகாரி - (அங்கத்தவர்)
4. கலாநிதி கே. தவலிங்கம் - (அங்கத்தவர்)
5. திரு. ஐ.ஏ. ஹமீட் - (அங்கத்தவர்)

2.4.6 எல்லை நிர்ணய ஆணைக்குழுவின் மொத்தப் பதவியணியினரும் 2022.11.04 ஆம் திகதி தொடக்கம் இந்த தேசிய குழுவின் பணிகளில் ஈடுபடுத்தப்பட்டனர். தேசிய குழுவின் தாபன மற்றும் நிதி நிர்வாக நடவடிக்கைகள் எல்லை நிர்ணய ஆணைக்குழுவின் ஊடாக மேற்கொள்ளப்பட்டன.

2.5 வளங்களின் மையம்

எல்லை நிர்ணய ஆணைக்குழுவின் இறுதி நோக்கங்கள் இரண்டிற்குமாக, எல்லைபட விடயத்தோடு தொடர்புடைய அச்சு மற்றும் இலத்திரனியல் ஆவணங்களின் கூட்டு மொத்தத்திலே விரிவாக்கம் செய்யும் செயன்முறையில் ஆணைக்குழு தொடர்ச்சியாக ஈடுபட்டு வகுகன்றது. எல்லை நிர்ணயத்தோடு தொடர்புடைய வர்த்தமானி அறிவித்தல்கள், அறிக்கைகள், ஏனைய கடித ஆவணங்களின் பிரதிகள் மற்றும் பிரதேச செயலக பிரிவுகள் மற்றும் கிராம அலுவலர் பிரிவுகளின் வரைபடங்களைக் கோருகின்ற தரப்பினர்களுக்கு வழங்குவதற்கும் ஆணைக்குழு தயாராகவுள்ளது.

2.6 எல்லை நிர்ணயம் மற்றும் அது தொடர்பான பிரச்சினைகள் தொடர்பாக பொது மக்களை அறிவுறுத்தல்

- 2022 ஆம் ஆண்டு மார்ச் மாதம் தொடக்கம் நாட்டில் நிலவிய பாதகமான பொருளாதார நிலைமை, எரிபொருள் பற்றாக்குறை மற்றும் ஆர்ப்பாட்டங்கள் காரணமாக உத்தேசிக்கப்பட்டிருந்த விதத்தில் அறிவுறுத்தல்/விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்த முடியாதிருந்த போதிலும், கீழே காட்டப்பட்டுள்ளவாறு நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட்டன.
- எல்லை நிர்ணயம் தொடர்பாக பதுளை மாவட்டத்தின் பதவிநிலை அலுவலர்கள் ஒன்றியத்தை அறிவுறுத்தல் - (எல்ல பிரதேச செயலாளரின் தலைமையில்)
- தேர்தல்கள் தொழில்வல்லுநர்களின் சங்கத்தின் அலுவலர்களை அறிவுறுத்தல் - 2022 மார்ச் மாதம்.
- 2022 ஆம் ஆண்டு மே, யூன் மாதங்களில் வயம்ப மற்றும் கொழும்பு பல்கலைக்கழகங்களின் விரிவுரையாளர்களை அறிவுறுத்தல் - Zoom தொழில்நுட்பம் ஊடாக.
- பெபரல் அமைப்பின் தலைமையில் நடாத்தப்பட்ட உள்ளூர் அதிகார நிறுவனங்களின் பெண் பிரதிநிதிகளை அறிவுறுத்தும் நிகழ்ச்சித்திட்டம்

- கேகாலை, களனி, ரத்கம, மாதம்பாகம, ஆகிய தேசிய பாடசாலைகளின் மாணவர் பாராளுமன்ற பிரதிநிதிகளை அறிவுறுத்தல்.
- கொழும்பு பல்கலைக்கழக சட்ட பீட மாணவர்களை அறிவுறுத்தும் நிகழ்ச்சித் திட்டம்.
- சப்ரகமுவ பல்கலைக்கழகத்தின் புதிய மாணவர்களை அறிவுத்தல் நிகழ்ச்சித் திட்டம்.
- மொழிக் கொள்கையை அமுல்படுத்தும் நடவடிக்கைகளுக்காக அரச கரும மொழிகள் ஆணைக்குழுவுடன் இணைந்து செயற்படுதல் மற்றும் சர்வதேச தாய் மொழித் தினத்தைக் கொண்டாடுதல்.
- வவுனியா AFRIEL அமைப்பின் நிகழ்ச்சித் திட்டம் ஒன்றின் ஊடாகத் தமிழ் மொழி மூல இளைஞர்கள் மற்றும் யுவதிகளை அறிவுறுத்தல.
- இலங்கை ஆசிரியர் சங்கத்தின் மாவட்டப் பிரதிநிதிகளை அறிவுறுத்தும் நிகழ்ச்சித் திட்டம்
- 2022 ஆம் ஆண்டு நவம்பர் மாதத்தில் தேர்தல் ஆணைக்குழுவின் அலுவலர்களை அறிவுறுத்தும் நிகழ்ச்சித்திட்டம்
- 2022 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் அரசியல் கட்சிகளை அறிவுறுத்தும் நிகழ்ச்சித் திட்டம்
- 2022 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் தேர்தல்கள் கண்காணிப்பு அமைப்புக்களை அறிவுறுத்தும் நிகழ்ச்சித் திட்டம்
- இதற்கு மேலதிகமாக, தொலைக்காட்சி கலந்துரையாடல்கள், யூரியுப் நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் பத்திரிகை நேர்முக கலந்துரையாடல்கள் மூலம் எல்லை நிர்ணயம் தொடர்பாக குறிப்பாக பிரதிநிதித்துவ சனநாயகத்தை உரிய அடிப்படையில் நடைமுறைப்படுத்துவதற்காக முறையான எல்லை நிர்ணயங்களின் தேவைப்பாடு தொடர்பாகவும் பிரஜைகள் அறிவுறுத்தப்பட்டனர்.

3. ஆண்டின் மொத்த நிதிச் செயலாற்றுகை

3.1 நிதிச் செயலாற்றுகை வெளிப்படுத்துகை

எசீஎ- எப்

2022 டிசம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான
நிதிச் செயலாற்றுகைக் கூற்று

(ரூபா)

பாதீட்டு 2022		குறிப்பு	உண்மை நிலை 2022	2021	
-	வருமானப் பெறுகைகள்		-	-	
-	வருமான வரி	1	-	-	ஏசீஏ-1
-	உள்ளூர் பொருட்கள் மற்றும் சேவைகள் மீதான வரி	2	-	-	
-	சர்வதேச வர்த்தகம் மீதான வரிகள்	3	-	-	
-	வரியில்லாத வருமானங்களும் ஏனையவையும்	4	-	-	
-	மொத்த வருமானப் பெறுகைகள் (அ)		-	-	
-	வருமானமற்ற பெறுகைகள்		-	-	
-	திறைசேரி பணிமுற்பணங்கள்		13,727,000	10,744,000	ஏசீஏ-3
-	வைப்புகள்		3,225	3,125	ஏசீஏ-4
150,000	முற்பணக் கணக்குகள்		249,758	491,829	ஏசீஏ-5
-	ஏனைய பிரதான பேரேட்டு கணக்கின் பெறுகைகள்		-	-	
-	மொத்த வருமானம் அல்லாத பெறுகைகள் (ஆ)		13,979,983	11,238,954	
-	மொத்த வருமானப் பெறுகைகளும் வருமானம் அல்லாத பெறுகைகளும் இ = (அ)+(ஆ)		13,979,983	11,238,954	
	திறைசேரிக்கான அனுப்பீடு (ஈ)		70,189	22,719	
	தேறிய வருமானம் கிடைப்பனவு மற்றும் வருமானம் அல்லாத கிடைப்பனவு உ = (இ)-(ஈ)		13,909,794	11,216,235	
	கழி : செலவினம்				
-	மீண்டுவரும் செலவினம்		-	-	
9,890,000	சம்பளம், கூலி, மற்றும் ஏனைய ஊழியர் அனுகூலங்கள்	5	9,975,485	8,729,753	
4,920,000	ஏனைய பொருட்கள் சேவைகள்	6	4,106,567	2,399,979	ஏசீஏ-2(ii)
-	மானியங்கள், கொடைகள் மற்றும் மாற்றல்கள்	7	-	-	
-	வட்டிக் கொடுப்பனவுகள்	8	-	-	
-	ஏனைய மீண்டுவரும் செலவினம்	9	-	-	
14,810,000	மொத்த மீண்டுவரும் செலவினம் (ஊ)		14,082,052	11,129,732	
	மூலதனம் செலவினம்				
-	மூலதனச் சொத்துக்களின் புணரமைப்பும், மேம்படுத்தலும்	10	-	-	
25,000	மூலதனச் சொத்துக்களின் கொள்வனவு	11	17,500	-	
-	மூலதன மாற்றல்கள்	12	-	-	ஏசீஏ-2(ii)
-	நிதிச் சொத்துக்களின் கொள்வனவு	13	-	-	
50,000	திறன் விருத்தி	14	-	-	
-	ஏனைய மூலதனச் செலவினங்கள்	15	-	-	
75,000	மொத்த மூலதனம் செலவினம் (எ)		17,500	-	
	வைப்புக் கொடுப்பனவுகள்		3,225	3,125	ஏசீஏ-4
500,000	முற்பணக் கொடுப்பனவுகள்		281,090	643,062	ஏசீஏ-5
	ஏனைய பிரதான பேரேட்டுச் செலவினம்		-	-	
	மொத்தபிரதான பேரேட்டுச் செலவினம் (ஏ)		284,315	646,187	
	மொத்த செலவினம் ஐ = (ஊ+எ+ஏ)		14,383,867	11,775,919	
	டிசம்பர் 31 இல் உள்ளவாறு மீதி ஒ = (உ-ஐ)		(474,073)	(559,684)	
	பணிமுற்பண இணக்க அறிக்கையின்படி மீதி		(474,073)	(559,684)	ஏசீஏ-7
-	டிசம்பர் 31ல் உள்ளவாறான பணிமுற்பண மீதி		-	-	ஏசீஏ-3
			(474,073)	(559,684)	

1

3.2 நிதி நிலை அறிக்கை

ஏசீஏ -பீ

2022 டிசம்பர் 31 இல் உள்ளவாறான
நிதி நிலைமைக் கூற்று

	குறிப்பு	உண்மை நிலை 2022 ரூபா	2021 ரூபா
நிதி சொத்துக்கள் அற்றது			
ஆதனம், பொறித் தொகுதி மற்றும் உபகரணம்	ஏசீஏ-6	2,421,393	2,403,893
நிதி சொத்துக்கள்			
முற்பணக் கணக்குகள்	ஏசீஏ-5/5ஏ	1,062,122	1,030,790
காசு மற்றும் காசுக்குச் சமனானவை	ஏசீஏ-3	-	-
மொத்த சொத்துக்கள்		**3,483,515**	**3,434,683**
தேறிய சொத்துக்கள் / உரிமைப் பங்கு			
திறைசேரிக்கு தேறிய சொத்துக்கள்		1,062,122	1,030,790
ஆதனம், பொறித் தொகுதி மற்றும் உபகரண ஒதுக்கம்		2,421,393	2,403,893
வாடகை மற்றும் பணி முற்பண ஒதுக்கம்	ஏசீஏ-5பீ		
நடைமுறைப் பொறுப்புக்கள்			
வைப்புக் கணக்குகள்	ஏசீஏ-4	-	-
தீர்க்கப்படாத பணிமுற்பண மீதி	ஏசீஏ-3	-	-
மொத்தப் பொறுப்புக்கள்		**3,483,515**	**3,434,683**

பக்க இலக்கம் ..... முதல் ..... வரை ஏசீஏ 1 முதல் ஏசீஏ 7 வரையான மாதிரிப் படிவங்களின் மூலம் சமர்ப்பிக்கப்படுகின்ற கணக்குத் தகவல்கள் மற்றும் குறிப்புகளின்/பின்னிணைப்புகளின் பக்க இலக்கம் ..... முதல் ..... வரை உள்ளடங்கியுள்ள ஏனைய கணக்குக் குறிப்புகளின் விபரமும் இந்த இறுதிக் கணக்குகளில் உள்ளடங்கிய பகுதியாகும். இந்த நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளுக்கு இணங்கியதாக மேற்கொள்ளப்பட்டுள்ள அதேவேளையில் இங்கு நிதிக்கூற்றுக்களின் குறிப்புகளின் மூலம் வெளிப்படுத்தப்பட்டுள்ளவாறு, மிகவும் பொருத்தமான கணக்கீட்டுக் கொள்கைகள் பயன்படுத்தப்பட்டுள்ளன. அதனால் மேலேயுள்ள இறுதிக் கணக்குகளில் குறிப்பிடப்பட்டுள்ள தொகைகள், அது தொடர்பான கணக்குக் குறிப்புகள் மற்றும் ஏனைய கணக்குத் தகவல்கள் திறைசேரிப் புத்தகங்களுடன் சீராக்கம் செய்யப்பட்டுள்ளது என்பதையும் அவை அந்தத் தொகைகளுடன் உடன்படுகின்றது என்பதையும் இத்தால் சான்றுப்படுத்துகிறோம்.

நிதி நிருவாகத்திற்காக வினைத்திறன்மிக்க உள்ளக நிருவாகத் தொகுதியொன்று அறிக்கையிடும் நிறுவனத்தில் காணப்படுகின்றது எனவும் நிதி நிருவாகத்திற்காக உள்ளக நிருவாகத் தொகுதியின் செயற்திறனை மேற்பார்வை செய்வதற்கும் அதற்கு அமைவாக அந்தத் தொகுதியை வினைத்திறனுடன் நடைமுறைப்படுத்துவதற்குத் தேவையானவாறு மாற்றங்களை மேற்கொள்வதற்கும் அடிக்கடி மீளாய்வுகள் மேற்கொள்ளப்படுகின்றது எனவும் இத்தால் சான்றுப்படுத்துகிறோம்.

.....
தலைமைக் கணக்கெடுப்பு உத்தியோகத்தர்
பெயர் : ஏ.முத்துபால
பதவி : செயலாளர்

திகதி : 2023.02.27

A. Muthumala
Secretary (Acting)
Delimitation Commission
Surveyor General's Office building
Colombo - 05

.....
கணக்கீட்டு உத்தியோகத்தர்
பெயர்:இ.ஜி.எஸ். சிசிர குமார
பதவி :கணக்காளர்

திகதி : 2023.02.27

E.G.S. Sisira Kumara
Accountant
Delimitation Commission
Surveyor General's Office building
Colombo - 05

3.3 பண புழக்கங்களின் அறிக்கை

ஏசீஏ- சீ

2022 டிசம்பர் 31 இல் உள்ளவாறான
காசுப் பாய்ச்சல் கூற்று

	உண்மை	
	2022 ரூபா	2021 ரூபா
தொழிற்பாட்டு செயற்பாடுகளிலிருந்தான காசுப் பாய்ச்சல்		
மொத்த வரிப் பெறுகைகள்	-	-
கட்டணங்கள், தண்டப்பணங்கள், தண்டனைகள் மற்றும் உத்தரவுப் பத்திரங்கள்	-	-
இலாபம்	-	-
வருமானம் அல்லாத பெறுகைகள்	-	-
ஏனைய வருமான தலைப்புகளுக்காக சேகரிக்கப்பட்ட வருமானம்	245,693	289,197
கிடைக்கப்பெற்ற கட்டுநிதி	13,727,000	10,744,000
முற்பணங்களை அறவிடல்	249,758	212,154
வைப்புக்களின் பெறுகை	3,225	3,125
செயற்பாடுகளிலிருந்து உருவாக்கப்பட்ட மொத்தக் காசு (அ)	**14,225,676**	**11,248,476**
கழி - பகிர்ந்தளிக்கப்பட்ட காசு		
ஆளுக்குரிய வேதனங்கள் மற்றும் தொழிற்பாடுக் கொடுப்பனவுகள்	14,056,552	11,123,332
மானியங்களும் மாற்றுக் கொடுப்பனவுகளும்	-	-
ஏனைய செலவினத் தலைப்புகளுக்காக மேற்கொள்ளப்பட்ட செலவினம்	-	-
திறைசேரிக்குத் தீர்க்கப்பட்ட பணிமுற்பணம்	70,189	22,719
முற்பணக் கொடுப்பனவு	78,210	99,300
வைப்புக் கொடுப்பனவு	3,225	3,125
தொழிற்பாடுகளுக்கு பகிர்ந்தளிக்கப்பட்ட மொத்தக் காசு (ஆ)	**14,208,176**	**11,248,476**
தொழிற்பாடு செயற்பாடுகளிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல் (இ)=(அ)-(ஆ)	**17,500**	**-**
முதலீட்டு செயற்பாடுகளிலிருந்தான காசுப் பாய்ச்சல்		
வட்டி	-	-
பங்கு இலாபம்	-	-
உரிமை இழந்த ஏற்பாடுகள் மற்றும் பௌதீக சொத்துக்களின் விற்பனை	-	-
உப கடன்கள் மீதான அறவீடுகள்	-	-
	-	-
முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்து உருவாக்கப்பட்ட மொத்தக் காசு (ஈ)	**-**	**-**
கழி - பகிர்ந்தளிக்கப்பட்ட காசு:		
கொள்வனவு அல்லது பௌதீகச் சொத்தக்களின் நிர்மாணிப்பு மற்றும் ஏனைய முதலீடுகளின் கொள்வனவு	17,500	-
முதலீட்டுச் செயற்பாடுகளுக்கு வழங்கப்பட்ட மொத்தக் காசு (உ)	**17,500**	**-**
முதலீட்டுச செயற்பாடுகளிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல் (ஊ)=(ஈ)-(உ)	**(17,500)**	**-**
தொழிற்பாடுகள் மற்றும் முதலீட்டுச் செயற்பாடுகளிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல் (எ)=(இ)+(ஊ)	**0**	**-**
நிதிச் செயற்பாடுகளிலிருந்தான காசுப் பாய்ச்சல்		
உள்ளூர்க் கடன்கள்	-	-
வெளிநாட்டுக் கடன்கள்	-	-
பெற்ற நன்கொடைகள்	-	-
நிதி நடவடிக்கைகளிலிருந்து உருவாக்கப்பட்ட மொத்தக் காசு (ஏ)	**-**	**-**
கழி - பகிர்ந்நதளிக்கப்பட்ட காசு:		
உள்ளுர் கடன்கள் மீதான மீளக் கொடுப்பனவுகள்	-	-
வெளிநாடுடுக் கடன்கள் மீதான மீளக் கொடுப்பனவுகள்	-	-
நிதிச் செயற்பாடுகளுக்கு பகிர்ந்தளிக்கப்பட்ட மொத்தக் காசு (ஐ)	**-**	**-**
நிதிச் செயற்பாடுகளிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல் (ஒ)=(ஏ)-(ஐ)	**-**	**-**
காசில் ஏற்பட்ட தேறிய அசைவு (ஓ)=(எ) +(ஒ)	-	-
ஜனவரி 01 ஆம் திகதியிலுள்ளவாறான ஆரம்ப காசு மீதி	-	-
டிசம்பர் 31ஆம் திகதியிலுள்ளவாறான இறுதிக் காசு மீதி	-	-

3

3.4 நிதி வெளிப்படுத்துகைக் குறிப்புக்கள்

அறிக்கையிடலின் அடிப்படை

1) அறிக்கையிடல் காலப்பகுதி

இந் நிதிக் கூற்றுக்களுக்கான அறிக்கையிடல் காலப்பகுதி 2022 சனவரி 01 முதல் டிசம்பர் 31 வரையானதாகும்.

2) அளவீட்டுக்கான அடிப்படை

நிதிக்கூற்றுக்களானது, வரலாற்றுக் கிரய அடிப்படையிலேயே தயாரிக்கப்பட்டுள்ள அதேவேளையில், ஒரு சில சொத்துக்களின் வரலாற்றுக் கிரயம் மீள்மதிப்பீடு செய்யப்பட்ட பெறுமதிக்கு மேம்படுத்தப்பட்டுள்ளது. வேறு விதத்தில் குறிப்பிடப்பட்டில்லாத போது கணக்கு தயாரிப்பு நடவடிக்கைகள் மேம்படுத்தப்பட்ட காசு அடிப்படையில் மேற்கொள்ளப்படும்.

நிதிக் கூற்றுக்களிலுள்ள இலக்கங்கள் இலங்கை ரூபாவில் கிட்டிய ரூபாய்க்கு தயாரிக்கப்படல் வேண்டும்.

3) வருமானத்தை அடையாளங்காணுதல்

நாணயமாற்று மற்றும் நாணயமாற்று அல்லாத வருமானங்கள் அவை கிடைக்கக்கூடிய காலப்பகுதியை கவனத்திற்கொள்ளாது, காசு கிடைக்கக் கூடிய காலப்பகுதிக்குள் வருமானமாக அடையாளங் காணப்படுகின்றது.

4) சொத்து, இயந்திர மற்றும் உபகரணம் ஆகியவற்றின் அங்கீகாரம் மற்றும் அளவீடு

சொத்துக்கள் நம்பத்தகுந்த அடிப்படையில் அளவிடப்படுகின்றதா மற்றும் நிறுவனத்தின் சொத்துக்கள் எதிர்கால பொருளாதார நலன்களுடன் தொடர்புடையதாக இருக்கின்றதா என்பதற்கான நிகழ்தகவின் அடிப்படையிலேயே சொத்து, இயந்திரம் மற்றும் உபகரணங்கள் அங்கீகரிக்கப்படுகின்றன.

கிரயமுறை பொருத்தமில்லாத சந்தர்ப்பத்திலேயே சொத்து, இயந்திர மற்றும் உபகரணங்கள் கிரயம் மற்றும் மறமதிப்பீட்டு முறையில் அளவீடு செய்யப்படுகின்றது.

5) சொத்து, இயந்திர மற்றும் உபகரணங்களின் ஒதுக்கம்

இந்த மீள்மதிப்பு ஒதுக்கீட்டுக் கணக்கானது சொத்து, இயந்திர மற்றும் உபகரண கணக்கின் தொடர்புபட்டதாகும்.

6) காசு மற்றும் காசுக்கு சமமானவை

காசு மற்றும் காசுக்கு சமமானவை 2022 டிசம்பர் 31 இல் உள்ள உள்நாட்டு நாணயத்தாள்கள் மற்றும் நாணயங்களை உள்ளடக்கியதாகும்.

*
ஒரு குறிப்பிட்ட அறிக்கையிடல் நிறுவனத்திற்கு குறிப்பிட்ட பரிவர்த்தனைகள் இருக்கும் சந்தர்ப்பங்களில் பொருத்தமான தகவல்களை அரச கணக்குகள் திணைக்களத்தின் அனுமதியுடன் உள்ளடக்கலாம் . அந்த குறிப்பிட்ட பரிவர்த்தனைகளுக்கு தேவையான வெளிப்படுத்தல் ''அறிக்கையிடலின் அடிப்படை'' என்பதற்குக் கீழ் சேர்க்கப்படலாம்.

* அறிக்கையிடல் நிறுவனத்திற்கு தொடர்புடைய கணக்கியல் கொள்கைகள் மட்டுமே ''அறிக்கையிடலின் அடிப்படை'' இன் கீழ் வெளிப்படுத் தப்படவேண்டும்.

3.5 வருமானங்களைக் கூட்டும் செயலாற்றுகை

வருமானக் குறியீடு	வருமானக் குறியீட்டின் விவரம்	வருமான மதிப்பீடு		கூட்டப்பட்ட வருமானங்கள்	
		ஆரம்ப மதிப்பீடு	இறுதி மதிப்பீடு	தொகை	இறுதி வருமானங்களின் மதிப்பீடு % என்ற வகையில்
-	-	-	-	-	-

3.6 குறித்தொதுக்கப்பட்ட நிதி ஒதுக்கீடுகளைப் பயன்படுத்தும் செயலாற்றுகை

நிதி ஒதுக்கீட்டு வகை	குறித்தொதுக்கப்பட்ட ஒதுக்கீடுகள்		உள்ளபடியான செலவினம் (ரூ.)	பயன்படுத்தப்பட்ட ஒதுக்கீடுகள், முடிவுக்குக் கொண்டுவரப்பட்ட இறுதி ஒதுக்கீட்டுத் தொகையின் % மாக
	ஆரம்ப ஒதுக்கீடு (ரூ.)	இறுதி ஒதுக்கீடு (ரூ.)		
மீண்டெழும்	14,810,000.00	15,910,000.00	14,082,052.00	88.51%
முதலீட்டு	75,000.00	75,000.00	17500.00	23.33%

3.7 நி.பி. 208 ற்கு அமைய, வேறு அமைச்சுக்கள் / திணைக்களங்களின் முகவர் ஒருவராக இவ்வாணைக்குழுவிற்கு அன்பளிப்புச் செய்யப்பட்ட நிதி ஒதுக்கீடுகள்

தொடர் இலக்கம்	நிதி ஒதுக்கீடு கிடைக்கப் பெற்ற அமைச்சு / திணைக்களம்	நிதி ஒதுக்கீட்டின் நோக்கம்	ஒதுக்கீடு		உள்ளபடியான செலவு	பயன்படுத்தப்பட்ட ஒதுக்கீடு வழங்கப்பட்ட ஒதுக்கீட்டின் சதவீதம் % மாக
			ஆரம்ப ஒதுக்கீடு	இறுதி ஒதுக்கீடு		
-	-	-	-	-	-	-

3.8 நிதி அல்லாத சொத்துக்களை அறிக்கையிடும் செயலாற்றுகை

சொத்துக்களின்குறியீடு	குறியீட்டு விபரம்	2022.12.31 ஆம் தேதியன்று பண்டக் கணிப்பீட்டு அறிக்கைக்கமைய நிலுவை (ரூ.)	2022.12.31 ஆம் தேதியன்று நிதி நிலைமை அறிக்கைக்கான நிலுவை (ரூ.)	எதிர்காலத்தில் கணக்கியல்படுத்தப்பட வேண்டிய (ரூ.)	முன்னேற்றத்தினை % சதவீதமாக அறிக்கையிடல்
9151	கட்டிடங்களும் கட்டமைப்புக்களும்	-	-	-	-
9152	இயந்திரப் பொறிகள்	2,421,392.70	2,421,392.70	-	100%
9153	காணிகள்	-	-	-	-
9154	தொட்டுணர முடியாத சொத்துக்கள்	-	-	-	-
9155	உயிரியல் சொத்துக்கள்	-	-	-	-
9160	ஆற்றப்படுகின்ற பணிகள்	-	-	-	-
9180	குத்தகைக்கு விடப்பட்ட சொத்துக்கள்	-	-	-	-

3.9 கணக்காய்வாளர் நாயகத்தின் அவதாணிப்புக்கள்

ජාතික විගණන කාර්යාලය
தேசிய கணக்காய்வு அலுவலகம்
NATIONAL AUDIT OFFICE

මගේ අංකය எனது இல. My No. PIC/B/DC/2/22/25

ඔබේ අංකය உமது இல. Your No.

දිනය திகதி Date 2023 මැයි 31 දින.

DELIMITATION COMMISSION 09 JUN 2023 COLOMBO - 05

DN

ලේකම්,
සීමා නිර්ණය කොමිෂන් සභාව.

ශීර්ෂය - 025 සීමා නිර්ණය කොමිෂන් සභාවේ 2022 දෙසැම්බර් 31 දිනෙන් අවසන් වර්ෂය සඳහා වූ මූල්‍ය ප්‍රකාශන පිළිබඳව 2018 අංක 19 දරන ජාතික විගණන පනතේ 11(1) වගන්තිය ප්‍රකාරව විගණකාධිපති සම්පිණ්ඩන වාර්තාව.

යටෝක්ත වාර්තාව හා මූල්‍ය ප්‍රකාශනයේ භාෂාත්‍රයෙන් වූ මුල් පිටපත් මේ සමඟ එවා ඇත.

එච්.එස්.එස්.පෙරේරා
ජ්‍යෙෂ්ඨ සහකාර විගණකාධිපති
විගණකාධිපති වෙනුවට

එච්.එස්.එස්. පෙරේරා
ජ්‍යෙෂ්ඨ සහකාර විගණකාධිපති
ජාතික විගණන කාර්යාලය
බත්තරමුල්ල

පිටපත : අධ්‍යක්ෂ ජනරාල් - රාජ්‍ය ගිණුම් දෙපාර්තමේන්තුව

අංක 306/72, පොල්දූව පාර, බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව
இல. 306/72, பொல்துவ வீதி, பத்தரமுல்லை, இலங்கை.
No. 306/72, Polduwa Road, Battaramulla, Sri Lanka.
+94 11 2 88 70 28 - 34
+94 11 2 88 72 23
ag@auditorgeneral.gov.lk
www.naosl.gov.lk

ජාතික විගණන කාර්යාලය
தேசிய கணக்காய்வு அலுவலகம்
NATIONAL AUDIT OFFICE

මගේ අංකය / எனது இல. / My No. PIC/B/DC/2/22/25

ඔබේ අංකය / உமது இல. / Your No.

දිනය / திகதி / Date 2023 මැයි 31 දින.

ලේකම්,

සීමා නිර්ණය කොමිෂන් සභාව.

ශීර්ෂය 025 - සීමා නිර්ණය කොමිෂන් සභාවේ 2022 දෙසැම්බර් 31 දිනෙන් අවසන් වර්ෂය සඳහා වූ මූල්‍ය ප්‍රකාශන පිළිබඳව 2018 අංක 19 දරන ජාතික විගණන පනතේ 11(1) වගන්තිය ප්‍රකාරව විගණකාධිපති සම්පිණ්ඩන වාර්තාව.

---

1. මූල්‍ය ප්‍රකාශන

1.1 මතය

